MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

# மழை நாளில் காகித கப்பலில் உத்திகள்

முனைவர் சி.தேவி,
உதவிப்பேராசிரியர்
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராசரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.
devi-tam@sfrcollege.edu.in - 9442436396
DOI 10.5281/zenodo.18642046

**Abstract :**

**A technique is a method used by a writer to convey his inner thoughts to the hearts of others. In today's times, new poets have used new techniques to impress their thoughts on the minds of the readers. In this regard, the purpose of this study is to examine the techniques used in the book 'Paper Boat on a Rainy Day' by poet Shanthakumari.**

**KeyWords : Poem – Shanthakumari – Technique – Psychology**

**முன்னுரை:**

படைப்பாளன் ஒருவன் தனது உள்ளக் கருத்தைப் பிறருடைய இதயங்களில் பொருத்தும் வண்ணம் பயன்படுத்தும் முறையே உத்தி ஆகும். இன்றைய காலத்தில் புதுக்கவிஞர்கள் தம் கருத்துக்கள் படிப்பவர் மனதில் பதிய வேண்டும் என்பதற்காகப் புதுப்புது உத்திகளைக் கையாளுகினறனர். அந்த வகையில் , 'கவிஞர்சாந்தகுமாரியின் மழை நாளில் காகித கப்பல்'என்ற நூலில் பயன்படுத்தியுள்ள உத்திகளை ஆய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

**உத்தி:**

'யுக்தி' என்ற வடசொல்லின் திரிபே உத்தி ஆகும். ஒரு கலைஞன் தன் துறையில் செவ்விய வெளியீட்டிற்குப் பயன்கொள்ளும் ஆற்றலும் ஆக்கமுறையும் உத்தி என்று கூறுவர். தீ. லீலாவதி உத்தி பற்றிக் கூறும் போது.

"உத்தி என்பது கலை ஆக்கமுறை, படைப்பில்
கலைஞனின் முத்திரைப் பதிவாய் அமைவது.
அவன் ஆளுமைத் திறத்தின் தனித்துவங்களைச் சுட்டிக்காட்டவல்லது"[1]

- என்று குறிப்பிடுகிறார்.கருத்துக்களை வாசககளின் மனம் ஈர்க்குமாறுஎடுத்துக்கூறக்கையாளும் வகையேஉத்தி ஆகும்.இதனை,

"ஒரு கலைஞன் தன் துறையின்செவ்விய வெளியீட்டிற்குப் பயன்கொள்ளும் ஆற்றலும் ஆக்க முறையும் உத்தி"[2]என்றுச.வே. சுப்பிரமணியன் விளக்குகிறார்.

**குறியீட்டுஉத்தி:**

புதுக்கவிதையில் பயன்படுத்தப்பட்டு வரும் உத்திகளுள் ஒன்று குறயீடு. இக்குறியீடு கவிதையை அழகுற ஆக்குகின்றது. ஆங்கிலத்தில் இதனை symbol எனக் குறிப்பிடுவர்.

"ஒரு பொருளை மற்றொரு பொருளின் மூலம்
குறிப்பால் உணர்த்துவதையே குறியீட்டு உத்தி."[9]

- என்பர். ஒன்றைக் கூறும் போது அதனை மறைத்து வேறொரு பொருள் பட குறிப்பால் உணர்த்தும் உத்தி முறையே குறியீடு எனலாம். இதனை,

"மூளியாய் இருந்தது
பாரிமுனைத்


http://Creativecommons.org//license/by/4.0/.

தெருவோரத்தில்
சதுரப்பெட்டியின்மேல்
கொட்டிக்கிடந்த
மல்லியைக் கட்டிவிற்ற
பூக்காரியின்
வறண்ட கூந்தல்."(ம.நா.கா.க. ப-10)

- 'வெறுமை என்ற தலைப்பில் கணவனை இழந்தப் பெண்ணின் நிலை குறியீடாக அமைந்துள்ளன.

**வினா விடை உத்தி:**

வினாவிடை உத்தி என்பது ஒரு குறிப்பிட்ட தலைப்பைப் பற்றி கேள்விகள் கேட்டு, அதற்கான விடைகள் கூறும் வகையில் அமைவதே வினா விடை உத்தியாகும். இதனை,

"கேள்வி எழுந்தது
ராமனா
ராவணனா
யாரைப் பிடிக்குமென்று.
பட்டென
பதில் சொன்னேன்
பத்துத் தலையனான
ராவணனே என்று!"(ம.நா.கா.க. ப-54)

- உனக்கு யார் பிடிக்கும் என்ற கேள்விக்கு எனக்குப்பிடித்தது இராவணனே, சீதையை மாற்றான் சொல் கேட்டு தீயிறக்கிய இராமனைப் பிடிக்காது என்று பதிலரைத்த விதம் கேள்வி கேட்டு விடை கூறும் தன்மையில் அமைந்துள்ளதால் இக்கவிதை 'வினா விடை உத்திக்குச் சான்றாக அமைந்துள்ளன.

**பின்னோக்குஉத்தி:**

மனிதன் தன் வாழ்வில் "கடந்தகால" நிகழ்வுகளை நினைத்துப் பார்த்து இன்புறுவது இயல்பான ஒன்றாகும். இதனை, இலக்கியத்தில் பின்னோக்குஉத்திஎனச்சுட்டலாம் . "முன்னொரு காலத்து நிகழ்வினை பிறிதொரு காலத்துஎண்ணும் பாங்கில் நிகழ்ந்ததை நினைக்கும் உத்தி" [10]என்று குளோறிய தனதுநூலில் குறிப்பட்டிருக்கிறாள்.இதனை, சாந்தகுமாரிதனதுகவிதைகளில்

"உன் நினைவுகளோடே
தொடங்கும் என் விடியல்கள்.
வைகறையின் பனிக்காற்றில்
உன் சிநேகிதத்தின் ஈரம்."(ம.நா.கா.க. ப-7)

- தனதுகாதலியின்நினைவுகளைஎண்ணிக்காதலன்வாடுவதனை "நீயில்லாப்பொழுதுகள்" என்றதலைப்பில்பின்னோக்குஉத்தியினைப்பயன்படுத்திக்கூறியுள்ளார்.

**கவிதைஉத்தி:**

காலத்துடன் மனிதனும் விரைந்தோடுகின்றநேரத்தில்அறிவுரைகளையும் சமுதாயத்திற்கு முன்னேற்றம் தரும் செய்திகளையும் நாடு சீரழிந்து கொண்டிருக்கிறது என்பது போன்ற செய்திகளையும் கவிதைஉத்தியினைப் பயன்படுத்தி எளிய முறையில் வெளியிடுகின்றனர்.


http://Creativecommons.org//license/by/4.0/.

"இலக்கியம் ஒரு மலை எனின் பாட்டு அதன்சிகரம் எனலாம். இலக்கியம் ஒருபெரிய மரம் எனின் பாட்டு அதன் உச்சிக் கிளையாக விளங்குகிறது" [11] எனலாம். இவ்வகையில் கவிஞர்சாந்தகுமாரியின் கவிதைகள் அமைந்துள்ளன.

**அணி:**

அணி என்பது அணியப்படுவது. அலங்காரம் என்றும் பொருள் கூறுவர். ஒரு பெண்ணுக்குப் பல அணிகளைப் பூட்டி அழகுபடுத்துவது போல, கவிதையைச் சொல்லாலும், பொருளாலும், கற்பனைநயத்தாலும்அழகுறச்செய்வதுஅணிஆகும். இதனை,

"பொருளினும்சொல்லினும்புனையறுசெய்யுட்கு
அணியுறப்புணாத்தலின்அணிஎனும்பெயாத்தே"[12]

என்றுமாறனலங்காரம்அணிபற்றிஇலக்கணம்கூறுவதாகச்ச.வே. சுப்பிரமணியன்குறிப்பிடுவார்.

**உவமை அணி:**

ஒன்றவை விளக்குவதற்கு இன்னாரு பொருளையும் சேர்த்து உவம உருபுகள் அமைய கூறுவது உவமை ஆகும்.

"பண்பும் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும்பொருளொடு பொருள்புணர்த்
தொப்புமை தோன்றச் செப்புவ துவமை"[13]

- எனதண்டியலங்காரம்இலக்கணம்உரைக்கிறது.

"கால்நடைமருத்துவமனைக்
காளையைப்**போல**
ஒருபோதும்
பெண்ணின்விருப்பம்
அறிவதில்லை
ஆண்..."(ம.நா.கா.க. ப-103)

- என்றகவிதையில்ஒருஆணைகாளைக்குஒப்புமைப்படுத்திஉவமஉருபானபோலஎன்பதுவெளிப்படையாகவந்துள்ளதால்உவமைஅணிக்குச்சான்றாகஅமைந்துள்ளன.

**மோனைநயம்:**

அடிதோறும்முதலெழுத்துஒன்றிவரத்தொடுப்பதுமோனைத்தொடைஎன்பர். இதனை,

"அடித்தொறுந்தலையெழுத்தொடுப்பதுமோனை"[14]

என்றுதொல்காப்பியர்குறிப்பிடுகிறார். இம்மோனைத்தொடையினைக்கவிஞர்தனதுகவிதையில்,

"**ம**ரங்கள்
**ம**னிதர்களை நேசித்தாலும்
**ம**னிதர்களென்னவோ-
கோடரிகளோடுதான்..."(ம.நா.கா.க. ப-103)

என்றுகூறுவதிலிருந்துமுதல்எழுத்துஅடிதோறும்ஒன்றிஅமைந்திருப்பதனால்மோனைநயங்களுக்குச்சான்றாகும்.

**எதுகைநயம்:**

அடிதோறும்இரண்டாம்எழுத்துஒன்றிவரத்தொடுப்பதுஎதுகைத்தொடைஎன்பர். இதனை,

"அஃதொழிந்துஒன்றின்எதுகைஆகும்."[15]


http://Creativecommons.org//license/by/4.0/.

என்றுகூறுவர். இவ்வெதுகைத்தொடையினைக்கவிஞர்தனதுகவிதையில்,

"**என**து காற்றே,
**என**து சூரியனே,
**என**து மின்னலே, "(ம.நா.கா.க. ப-15)

என்றுகூறுவதிலிருந்துஇரண்டாம்எழுத்துஅடிதோறும்ஒன்றிஅமைந்திருப்பதனால்எதுகைநயங்களுக்குச் சான்றாகும்.

**இயைபுநயம்:**

அடிதோறும்கடைசிஎழுத்துஒன்றிவரத்தொடுப்பதுஇயைபுத்தொடைஎன்பர். இவ்வியைபுத்தொடையினைகவிஞர்தனதுகவிதையில்,

"பத்துக்குப் பத்தில்
பாந்தமாய் உடல்நுழைத்**தாய்**;
பக்தர்தரும் பழம் தின்று
பசியாற முயற்சி செய்**தாய்**."(ம.நா.கா.க. ப-24)

என்றுகூறுவதிலிருந்துகடைசிஎழுத்துஅடிதோறும்ஒன்றிஅமைந்திருப்பதனால்இயைபுநயங்களுக்குச்சான் றாகும்.

**அடுக்குத்தொடர்:**

ஒரு சொல் மேல் மற்றொரு சொல் அடுத்தடுத்து அடுக்கி வரத் தொடுப்பது அடுக்குத்தொடர் ஆகும். இது பிரித்தால் பொருள் தருவதாக அமையும். இந்த அடுக்குத் தொடரினைக் கவிஞரும் தமது கவிதைகளில் சிற்சில இடங்களில் பயன்படுத்தி உள்ளார்.

"வாவென்றழைத்த
மதியப்பொழுதில்
**தேடித் தேடி**
அலுத்துப் போனோம்-
நிழலுக்கான
மரமொன்றை!..."(ம.நா.கா.க. ப-97)

மரத்தின்தேவையைஉணர்த்தியஇக்கவிதையில்தேடித்தேடிஎன்றஅடுக்குத்தொடரினைப் பயன்படுத்தியுள்ளார்.

**இரட்டைக் கிளவி:**

பிரித்தால் பொருள் தராது அமைவது இரட்டைக் கிளவி ஆகும். இரட்டைக்கிளவி குறித்து தொல்காப்பியர்,

"இரட்டைக் கிளவி இரட்டின் பிரிந்து இசையா"[16]

என்று குறிப்பிடுகிறார். இதனை,

"குதூகலமாய் ஒரு
கோடைச் சுற்றுலா.
கட்டுச்சோறும்
பாட்டில் தண்ணீரும்
**கலகல**வென்ற
பாக்கெட் சிப்ஸும்..."(ம.நா.கா.க. ப-97)


http://Creativecommons.org//license/by/4.0/.

என்றகவிதையில்கலகலவென்றஇரட்டைக்கிளவிச்சொல்அமைந்துள்ளன.

**அந்தாதி:**

அந்தாதி என்பது , ஒரு செய்யுளின் இறுதியிலுள்ள எழுத்தோ , அசையோ, சீரோ அல்லது அடியோ அடுத்த செய்யுளின் முதலாக அமையும்படி பாடும் ஒரு பாடல் வகை ஆகும். இதனை,

“பனிபடர்ந்த **மலையும்**
**மலை**வீழ்ந்த **நதியும்**
**நதி**பிரிந்த **புனலும்**
**புனல்** மிதக்கும் படகும்
அது விலக்கும் நீரும்
அழகென்ற உடனே
அம்மா சொன்னாள்-
நீரடித்து நீர்
விலகாதென....”(ம.நா.கா.க. ப-31)

என்றபாடலில்ஒருசொல்லின்இறுதிஎழுத்துஅடுத்தசொல்லின்தொடக்கமாகஅமைந்துள்ளன.

**பிறமொழிக் கலப்பு:**

மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் வகையில் பேச்சு க்கோடு ஆங்கில மொழி கலந்து விட்டன. சில கவிஞர்கள் , ஆங்கிலச் சொற்களைத் தனது கவித்துவத்துக்கு ஏற்பப் பயன்படுத்தி வருகின்றனர்.

“ரெண்டு **ஷிப்ட்டு** வேலை செஞ்சு
தூக்கம்வர **மெஷினுக்**குள்ளே
சிக்கிச்சு வேணிவெரலு அஞ்சு
மொட்டையான கைகளோடு
பொட்டையான கனவோடு
வாடித்தானே நிக்குதந்த பொண்ணு!....”(ம.நா.கா.க. ப-101)

என்றகவிதையில்**ஷிப்ட்டு**, **மெஷின்** போன்ற ஆங்கிலச் சொற்களை ஆங்காங்கே பயன்படுத்தி உள்ளதைக் காணமுடிகிறது.

**தொகுப்புரை:**

இவ்வியலின்வாயிலாகக்கவிஞர்சாந்தகுமாரியின் கவிதைகளில் இடம்பெற்றுள்ள நயம், உத்தி, மோனை, எதுகை, இயைபு, அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி, அந்தாதி, பின்னோக்கு உத்தி, வினா விடை உத்தி, குறியீட்டு உத்தி மற்றும் உவமை போன்ற உத்திகளை அழகுறப் பயன்படுத்தியுள்ளார்.

**அடிக்குறிப்பு :**

1. மோகன், இரா., புதுக்கவிதைத்திறன், ப.77
2. சுப்பிரமணியன்,ச.வே., இளங்கோவின்இலக்கியஉத்திகள், ப.6
3. இளம்பூரணர் (உ.ஆ), தொல். நூ.644
4. இளம்பூரணர் (மு. நூ), நூ. 656
5. சுப்பிரமணியன்,ச.வே., இளங்கோவின்இலக்கியஉத்திகள், ப. 32
6. சுப்பிரமணியன்,ச.வே., கம்பனின்இலக்கியஉத்திகள்ப.16
7. அறிவுநம்பி.அ., இலக்கியங்களும்உத்திகளும், ப. 99


http://Creativecommons.org//license/by/4.0/.

8. டாக்டர். பொன்மணிவைரமுத்து, சங்கஇலக்கியத்தில்புதுக்கவிதைக்கூறுகள், ப.401
9. தமிழ்த்துறையினர், தமிழாய்வுபன்முகநோக்கு 2008, ப. 550
10. குளோறியாசுந்தரமதி.இலா., இலக்கியக்கல்வியும்பகுப்பாய்வும், ப.10
11. ஞானமூர்த்தி.தா.ஏ., இலக்கியத்திறனாய்வியல், ப. 34
12. சுப்பிரமணியம்.ச.வே., தமிழ்இலக்கியக்கொள்கை, ப. 160
13. இராமசுப்பிரமணியம்.வ.த., (உ.ஆ) தண்டியலங்காரம், ப.70
14. சோமஇளவரசு, நன்னூல், சொல். காண்டிகையுரை., ப.144
15.நுஃமன்,திறனாய்வுக் கட்டுரைகள்,ப.163
16.மேலது.,


http://Creativecommons.org//license/by/4.0/.